கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்
திட்டக்குடி.

**OS.144/2016** **DW: 3** **28.04.2026**

2026ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 28 நாள் பிரதிவாதி தரப்பு சாட்சியாகிய கலியபெருமாள் என்பவரின் வாக்குமூலம் 1873ஆம் ஆண்டின் 10-வது விதியின் ஏற்பாட்டின்படி செல்வி.N.ஷாலினி,B.Com.L.L.B.(Hons.) ஆகிய என்னால் ஆணையிடப்பட்டு உறுதி கூறப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கலியபெருமாள் | வயது | 82 |
| த/க. பெயர் | நாராயணசாமி | தொழில் | ஆவண எழுத்தர் |
| வட்டம் | திட்டக்குடி | கிராமம் | திட்டக்குடி |
| மாவட்டம் | கடலூர் | | |

**<u>குறுக்கு விசாரணை</u>**

நான் உரிமம் பெற்ற ஆவண எழுத்தர். அந்த உரிமத்தின் அடிப்படையில் தான் ஆவணத்தை தயார் செய்து சார் பதிவகத்தில் பதிவுக்கு கொடுப்பேன். நான் ஆவணத்தை எழுதுவதற்காக எனக்கு தனியாக அலுவலகம் உள்ளதா என்றால் சார் பதிவகத்திற்கு எதிரில் மேசை போட்டு எழுதுவோம். தற்போது நான் ஆவணம் எழுதவில்லை. என்னிடம் காட்டப்படும் பி.வா.த.சா.ஆ.4 நான் தான் எழுதினேனா என்றால் நான் தான் எழுதினேன், எனது கையெழுத்து உள்ளது. இந்த ஆவணத்தை எழுதும்போது என்னுடன் இருந்தவர்கள் சாமிகண்ணு, ராணி, பரமசிவம் இருந்தனர் என்றால் சரிதான். இவர்களை தவிர இந்த ஆவணத்தை எழுதும்போது வேறு யாரும் உடன் இல்லை என்றால் சரிதான். இந்த ஆவணத்தினுள் சாமிகண்ணு பரமசிவத்திற்கு எந்த ஆவணத்தின் அடிப்படையில் தனக்கு சொத்து வந்தது என்ற வாசகம் இடம்பெறவில்லை என்றால் இல்லை. முன்பெல்லாம் அப்படி எழுதமாட்டார்கள். சாமிகண்ணு மற்றும் பரமசிவத்திற்கு சொத்து பாத்தியம் என்பதற்கான மூல ஆவணங்களை நான் பார்த்தேனா என்றால் இல்லை. இந்த ஆவணத்தை எழுதிய பிறகு எழுதிய இடத்தில் தான் படித்து பார்த்த கையெழுத்து வாங்குவேன் என்றால் சரிதான். படித்து பார்த்து கையெழுத்து போட்டபிறகு தான் நான் பதிவிற்கு கொண்டு செல்வேன். இந்த ஆவணம் பதிவு சமயத்தில் தான் சாட்சிகள் கையெழுத்திட்டனர் என்றால் இல்லை எனது முன்பு தான் கையெழுத்திட்டனர். சாமிகண்ணு, பரமசிவம் மற்றும் ராணி அவர்களிடம் படித்து காண்பித்த பிறகு தான் அவர்கள் கையெழுத்திட்டனர் என்றால் நான் படித்து காண்பிக்கும்போது சாட்சிகள் உடன் இருந்தார்கள். இந்த பத்திரம் எழுதும்போது சாமிகண்ணு, பரமசிவம் மற்றும் ராணி தவிர வேறு யாரும் உடன் இல்லை என்று சொல்லியுள்ளேன் என்றும், சாட்சிகள் எப்போது வந்து கையெழுத்திட்டனர்

என்றால் பதிவு செய்யும்போது வந்து கையெழுத்திட்டனர். சாட்சிகளுக்கு இந்த பத்திரத்தில் உள்ள சங்கதிகள் எதுவும் தெரியாது என்றும், பதிவு செய்யும்போது தான் கையெழுத்திட்டார்கள் என்றால் சரிதான்.

குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்பட்டது.

**Typed to my dictation in the open Court as per the statement of the witness, read over to the witness and admitted by him/her to be correct.**

N SHALINI

Digitally signed by N SHALINI
Date: 2026.04.28 17:39:20 +0530

Additional District Munsif,
Tittagudi.